# கிறிப்டோ முதலீட்டு மோசடிகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்

கிறிப்டோ முதலீடுகள் தொடர்பில் இடம்பெறும் மோசடிச் செயற்பாடுகள் எச்சரிக்கையான மட்டங்களுக்கு உயர்வடைந்துள்ளமை இந்நாட்களில் முக்கிய கரிசனையொன்றாகக் காணப்படுகின்றது. உங்களது நிதியங்களைப் பாதுகாப்பதற்கும் விழிப்புடன் இருப்ப-தற்கும் மோசடிக்காரர்கள் மூலம் பயன்படுத்தப்படுகின்ற சூழ்ச்சி முறைகள் பற்றி விழிப்புணர்வுடன் இருப்பது அத்தியாவசியமாகும்.

## மோசடிசெய்வோர் எவ்வாறு இயங்குகின்றனர்

உயர்வான ஆதாயங்கள் பற்றியும் அவர்கள் ஈட்டிய வருவாய்கள் பற்றி அடிக்கடி பெருமைபேசியும் விளம்பரம் செய்வதற்கு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி மோசடிக்காரர்கள் பல்வேறு சூழ்ச்சி முறைகளைப் பயன்படுத்துகின்றனர். சட்டபூர்வமானது என்ற பொய்யான உணர்வை இது உருவாக்கி புதிய பங்கேற்பாளர்களை ஈர்க்கின்றது. மேலும், பலியாகுபவஉகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு மோசடிக்காரர்கள் வட்ஸ்அப், டெலிகிராம் போன்ற தளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

மோசடியான விளம்பரங்கள் தொழில்சார் பண்புமிக்க வலைத்தளங்களைப் போல் தோன்றி, அவர்களது மோசடித் தன்மையினை மறைப்பதை இலக்காகக் கொள்கின்றன. சில மோசடிக்காரர்கள் பொய்யாக அமைக்கப்பட்ட இத்தளங்களில் அதிக வருவாயினை உழைத்தல் அல்லது கிறிப்டோ நாணயங்களை வர்த்தகம் செய்தல் பற்றிய தவறாக வழிநடாத்துகின்ற தகவல்களை வழங்குகின்ற வகுப்புக்களை அல்லது விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துவதன் மூலம் மேலும் ஒருபடி செல்கின்றனர்.

முதலீடு செய்யப்பட்டதன் பின்னர் மோசடிக்காரர்கள் நிதியங்களை சடுதியாக முடக்கலாம் அல்லது மேலும் ஆட்களை ஈர்ப்பதற்கு தொடர்ந்தும் ஏமாற்றை முன்னெடுக்கலாம். உங்களது முதலீடுகளை உரிமை மாற்றுவதற்கு முயற்சிக்கும்வரை மோசடியொன்றுக்கு நீங்கள் இரையாகிவிட்டீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளாதிருக்கலாம் என்பதை அறிந்திருப்பது அத்தியாவசியமாகும்.

## மோசடிகளிலிருந்து நீங்களாக பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

கிறிப்டோ நாணயங்கள் இலங்கையில் ஒழுங்குபடுத்தப்படுவதில்லை, சட்ட பூர்வமானதாகக் கொள்ளப்படுவதில்லை, ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான பாதுகாப்புக்கள் அற்றதாகும். கிறிப்டோ நாணயத்தைப் பயன்படுத்துவதுடன் இணைந்த குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கரிசனைகள் பற்றி ஊடக அறிக்கைகள் வாயிலாக இலங்கை மத்திய வங்கி வலியுறுத்துகின்றது.

கிறிப்டோ முதலீடுகளின் அடிப்படையில் உயர்வான ஆதாயங்களுக்கு வாக்குறுதியளிக்கின்ற நிதியியல் மோசடிகளின் அதிகரிக்கின்ற எண்ணிக்கைகள் பற்றி பொதுமக்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய மோசடிகள் மரபுரீதியான ஒழுங்குமுறைப்படுத்தல் பாதுகாப்புக்களை தவிர்த்து பாடுபட்டு உழைத்த பணத்தை ஆட்கள் இழந்துவிடுவதற்கு இட்டுச்செல்கின்றன.

## எச்சரிக்கைச் சமிஞ்சைகளை அடையாளங்காணுதல்

முதலிடுவதற்கு உங்களை அவசரப்படுத்துவதாக உணர்கின்ற அல்லது யாதார்த்தைவிட உயர்வான ஆதாயங்களை வாக்குறுதியளிக்கின்ற எதிர்பாராத செய்திகள் உங்களுக்குக் கிடைக்கப்பெறுமெனில் அவதானமாக இருங்கள். முதலீடொன்று நம்பமுடியாதளவிற்கு ஆதாயமிக்கதாகவிருக்குமாயின் அநேகமாக அதுவொரு மோசடி என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.

## மோசடிகளுக்கு பதிலிறுத்தல்

மோசடி பற்றி சந்தேகப்படுவீர்களாயின் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவியுங்கள். நீங்கள் பாதிக்கப்பட்டிருபீர்களாயின் பின்தொடர் முயற்சிகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். வேறுபட்ட திட்டங்களுடன் அல்லது இழந்த கட்டணங்களை மீளளிப்பதற்கான சலுகைகளுடன் மோசடிக்காரர்கள் மீளவும் தோன்றலாம்.

## இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனை: உங்கள் நிதியங்களைக் காத்துக்கொள்ளுங்கள்

இணையத்தளத்தில், பல்வேறு ஊடகங்கள் வாயிலாக அல்லது தனிப்பட்ட ஆட்களிடமிருந்து நீங்கள் சந்திக்கும் ஏதேனும் கிறிப்டோ நாணயத் திட்டங்களில் ஈடுபடுவதற்கெதிராக இலங்கை மத்திய வங்கி வன்மையாக எச்சரிக்கின்றது. கிறிப்டோ நாணயத் தொழிற்பாடுகள், ஆரம்ப நாணயக் குற்றி வழங்கல்கள் (Initial Coin Offerings), வார்த்தல், பரிமாற்றுதல், வைப்பு ஏற்றுக்கொள்ளல் அல்லது கட்டுக்காவல் சேவைகள் அல்லது கிறிப்டோ நாணயத்துடன் தொடர்புடைய ஆலோசனைப் பணிகள் போன்ற செயற்பாடுகளுக்காக ஆட்களுக்கு அல்லது வியாபாரங்களுக்கு இலங்கை மத்திய வங்கி உரிமங்களை வழங்கவில்லை அல்லது அதிகாரமளிக்கவில்லை என்பதனை வலியுறுத்தி அது பல எண்ணிக்கையான ஊடக அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

## இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படும் நடவடிக்கை

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக தடைசெய்யப்பட்ட திட்டங்களை பல்வேறு நிறுவனங்கள் நடாத்துகின்ற அத்துடன்∴அல்லது நடாத்தியதாக இலங்கை மத்திய வங்கி நிர்ணயித்துள்ளதுடன் இவற்றுக்கு மத்தியில் குறிப்பாக, பின்வரும் நிறுவனங்கள் மறைகுறிநாணயங்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதாக அறியப்பட்டன.

1. Sport Chain App, Sports Chain ZS Society Sri Lanka
2. OnmaxDT
3. MTFE App, MTFE SL Group, MTFE Success Lanka (Pvt) Ltd and MTFE DSCC Group (Pvt) Ltd.

## நிதியியல் உளவறிதல் பிரிவு வழங்கும் செய்தி

விழிப்பாக இருங்கள், அறிந்திருங்கள், உங்களது நிதியியல் நல்வாழ்வை காத்திடுங்கள். ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயற்பாடு பற்றி உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் விழிப்பாக இருப்பது கிறிப்டோ முதலீட்டு மோசடிகளை முறியடிப்பதில் வேறுபாடொன்றினைத் தோற்றுவிக்கலாம்.


பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி
இல.30., சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk